மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

தஞ்சை மருத்துவ மனையில் கொசுப் பெருக்கத்தை அகற்றும் பணி

*209 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் கொசுத் தொல்லையினை அகற்றிட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தஞ்சை மருத்துவக் கல்லூரி, மற்றும் மருத்துவமனைப் பகுதிகளில் கொசுப் பெருக் கத்தை ஒழிக்கும் பொருட்டு ரூ. 39,900 செலவில் வடிகால்கள் கட்டு வதற்கு அரசு அண்மையில் ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, கடந்த இரண்டாண்டு காலமாக சென்னை பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவ மனை, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை போன்றவற்றில் தொடர்ந்து உடல் நலக் குறைவு காரணமாகச் சிகிச்சை பெற்றவன் என்ற முறையிலே, இங்கெல்லாம் உள்ள கொசுத் தொல்லைகளைவிட, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதிகமாக கொசுத் தொல்லை உள்ளபடியே இருப்பதால், மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்ட அந்த மதிப்பீட்டுத் தொகையில் விரைவாக நடவ டிக்கை எடுத்து, ஒரு சிறப்பு நடவடிக்கையாவது எடுத்து, விரைவில் அது கைகூட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தஞ்சை மருத்துவமனை தஞ்சை நகரசபையின் எல்லைக்குள் இல்லை. வேறு பகுதியில் இருப்பதால் நகரசபையினர் இதற்கு நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை. ஆகவே, அந்த மருத்துவமனைக்குத் தனியாகத் திட்டம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் குடந்தையிலுள்ள பைலேரியா ஒழிப்பு அலுவலர்

1973 நவம்பர் 20]

அல்லது மலேரியா ஒழிப்பு அலுவலர் மூலமாகத் தஞ்சை மருத்துவமனை வட்டாரத்திலுள்ள கொசுத் தொல்லையை ஒழிக்க கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், வடிகால் கட்ட வேண்டுமென்பதை ஏற்று பொதுப்பணித் துறையினரை நிறைவேற்றுமாறு கேட்டிருக்கிறோம்.

திரு. எம். தேவராசன் : இந்தக் கொசுக்கள் என்றும் இல்லாத அளவில் இப்போது உலகத்தில் பெருகி இருப்பதாகவும் டி.டி.டி. போன்ற மருந்துகளுக்கும் இம்யூன் ஆகிவிடுவதாகவும் கூறுகிறார் கள். இது உண்மையா? ? இதனால் மலேரியா அதிகமாக இருப் பதும் உண்மையா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எந்த ஒரு மருந்தும் முதலில் அதனுடைய உரிய பலனைத் தந்தாலும்கூட அதையே தொடர்ந்து பயன்படுத்துகிறபோது அதனுடைய பலன் குறைந்து விடுகிறது. அந்த முறையில் கொசு ஒழிக்கப் பயன்படுத்தப்படுகிற மருந்துகள் சில இடங்களில் முழுப் பலன் தராமல் போய்விடுகிறது. அதனால் மலேரியா போன்றவை அதிகமாகி இருக்கிறது என்பது முழு உண்மை அல்ல. மலேரியா ரெகரிங்காக—திரும்பத் திரும்ப வரக்கூடிய நோய். அதைத் தடுப்பதற்கு முயற்சிகள் தொடர்ந்து நடைபெறத்தான் வேண்டும்.

Use of radio-active atoms to diagnose diseases

* 210 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there is any proposal to use radio-active atoms in the Madras City Hospitals to diagnose the diseases of abnormalities in the brain, thyroiod glands, lungs, heart, etc.; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னை அரசினர் பொது மருத்துவமனை, அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை நீங்கலாக ஏனைய மருத்துவ மனைகளில் கதிரியக்க ஓரக தனிமங்கள் (Radio-active isotopes) பயன்படுத்தும் செயற்குறிப்புகள் எவையு மில்லை, இவ்விரு மருத்துவமனைகளிலும்கூட இவற்றைப் பயன் படுத்தும் முறை தொடக்க நிலையில்தான் உள்ளது.